DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.27/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.3

Accused A1, A2 present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சந்திரசேகரன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 06th day of March, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது கே. லட்சுமியாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது மனைவி கலா கங்கர்செவல் கிராமத்தின் பஞ்சாயத்து தலைவராக உள்ளார். வழக்கு சம்பந்தப்பட்ட விபத்து 23.10.2023 ம் தேதி நடந்தது. மேற்படி வழக்கில் விபத்து கங்கர்செவல் கிராமத்தில் உள்ள விக்டோரியா பட்டாசு தொழிற்சாலையில் வைத்து மாலை சுமார் 5.00 மணிக்கு நடைபெற்றது.

நான் யாருக்கும் தகவல் சொல்லவில்லை. விபத்திற்கு யார் காரணம் என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலீஸார் விசாரித்தார்கள் என்றாலும், போலீஸ் விசாரணையில் விபத்து நடைபெற்ற உடன் எனக்கு தகவல் கிடைத்து மாலை 5.20 மணிக்கு கங்கர்செவல் கிராம நிர்வாக அலுவலருக்குபோன் செய்து தகவல் சொன்னேன்

என்றும், விசாரித்ததில் கணேசன், ராஜா. முத்தம்மாள் ஆகியோர்களுக்கு உடல் முழுவதும் தீக்காயம் ஏற்பட்டும் காயம்பட்டவர்கள் அங்கிருந்த வாகனத்தின் மூலம் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும், விபத்திற்கு காரணம் பட்டாசு தொழிற்சாலையில் பணிபுரிபவர்களுக்கு சரியான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்காமலும், ஆலையை சரியாக பராமரிக்காமலும், வெடிமருந்து கலவையை சரிவர பராமரிக்காமலும், பணியாளர்களை சரியாக கண்காணிக்காமலும் இருந்தால் மனித உயிருக்கும் உடமைக்கும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்திருந்தும் தொழிற்சாலையின் உரிமையாளர், போர்மேன் ஆகியோர்கள் மேற்கண்ட குறைபாடுகளுடன் தொழிற்சாலையை நடத்தியதால் வெடிவிபத்து ஏற்பட்டதை தெரிந்து கொண்டேன் என்றும், மேற்படி விபத்து சம்பந்தமாக கங்கர்செவல் கிராம நிர்வாக அலுவலர் ஆலங்குளம் காவல் நிலையத்தில் புகார் செய்த விபரத்தை தெரிந்துகொண்டேன் என்று கூறிவிட்டு தற்போது ஆலையின் உரிமையாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை – இல்லை.</u>

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.27/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.4

Accused A1, A2 present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பாலசண்முகம் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 06th day of March, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது கங்கர் செவல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விக்டோரியா பட்டாசு தொழிற்சாலையில் ஓட்டுநராக கடந்த 13 ஆண்டுகளாக பணியாற்றிவருகிறேன். தேதி ஞாபகம் இல்லை. நான் வாகனத்திலிருந்த சரக்கினை இறக்கிவைத்துவிட்டு வெளியில்நின்று கொண்டிருந்தேன். முதலாளி உடன் இருந்தார். அலறல் சத்தம் கேட்டது. இரண்டு பேரை தீக்காயத்துடன் கூப்பிட்டு வந்தார்கள். அவர்கள் பெயர் கணேசன் மற்றும் ராஜா ஆகும். 108 ஆம்புலன்சிற்கு போன் செய்தோம். லயன் கிடைக்கவில்லை. முதலாளி நம் வண்டியில் ஏற்றிச்செல் என்று கூறினார். கணேசன், ராஜா, முத்தம்மாள் ஆகியோர்களை எங்களது நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட வாகனத்தில் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

விபத்திற்கு காரணம் யார் என்று தெரியவில்லை. இந்த விபத்து சம்பந்தமாக வழக்கு போட்டது எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

வெடிவிபத்து யாருடைய கவனக்குறைவாலும் ஏற்படவில்லை என்றால் சரிதான். அந்த அறையில் மேற்படி 3 பேர்தான் பணி செய்தார்கள். பட்டாசு ஆலையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை எங்கள் முதலாளி முறையாக கொடுத்துவிடுவார் என்றால் சரிதான். அதேபோன்று மருந்து கலவையை எங்கள் போர்மேன் முறையாக கலந்துகொடுப்பார் என்றால் சரிதான். வெடிவிபத்திற்கு எதிரிகள் யாரும் காரணம் இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.